# தோல்விகளின் பதிவேடு

*நடபடிகள் பல வெற்றிகளை வெளிப்படுத்துகின்றது, ஆனால் இரட்சிப்பைப் பற்றி நித்தியமான பாடங்களைப் போதிக்கும் சில தோல்விகளை அது கவனிக்கத் தவறுவதில்லை. ஏமாற்றங்கள் - இருண்ட தோல்விகள் கூட - இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற விஷயத்தை ஒருவர் சில வேளை களில் மறந்து விடத் தூண்டுமளவுக்கு இந்தப் புத்தகத்தில் ஆச்சரியமான நிகழ்ச்சிகள் பல அடங்கியுள்ளன.*

*வேதாகமத்தில் உள்ள (நடபடிகளுக்கு) முந்திய புத்தகங் களில் உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடபடிகளின் நிகழ்ச்சி களைக் காண ஆர்வமுள்ளதாகவே இருந்திருக்கின்றது. பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தகங்களும் ஒருங்கிணைந்து வாசிக்கப்படுகையில் அவை பின்வரும் எதிர்பார்ப்புகளை நிச்சயமாக விட்டுச் செல்லுகின்றன: தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தினார் (ஆதி. 12:1-3; 22:17, 18); மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசியை எழுப்பப் போவதாக அவர் மோசேவுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் வாக்குத்தத்தம் பண்ணினார் (உபா. 18:15); மற்றும் அவர், தாவீதின் குமாரர் களில் ஒருவரை மேசியாவின் அரியணையில் வீற்றிருக்கச் செய்வதாகவும் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார் (2 சாமு. 7:12, 13). இத்துடன் கூடுதலாக, பின்னாளையத் தீர்க்கதரிசி களான ஏசாயா, யோவேல், மீகா மற்றும் தானியேல் போன்ற வர்களாலும் முன்னுரைத்தல் கூறப்பட்டது. “கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்” (ஏசா. 2:2) என்பது அதன் போதனை யின் புதிய வழிமுறைகளுடனும், மாம்சமான யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் பொழியப்படுதலும், என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யம் நிலைநாட்டப்படுதலும் அறிய அல்லது அநுபவிக்கப்பட வேண்டியதாக இருந்தன.*

*புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களின் செய்தியானது இனி நடைபெற வேண்டியதாயிருந்த சில விஷயங்களைச் சுட்டிக்காட்டுவதாய்த் தங்களைக் காத்துக் கொண்டன. “நான் என் சபையைக் கட்டுவேன்” (மத். 16:18)*

என்று இயேசு கூறினார். அப்பொழுது வாழ்ந்தவர்களில் சிலர் இராஜ்யம் வல்லமையுடன் வருவதைக் காணுமுன் எவ்வகையிலும் மரிக்க மாட்டார்கள் என்றும் அவர் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மாற். 9:1). அவர் தாம் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பு "நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக். 24:49) என்று அப்போஸ்தலர்களுக்குக் கூறினார்.

நடபடிகளைத் தொடர்ந்து வரும் புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களில், மாபெரும் மாற்றங்கள் ஏற்கனவே நடந்திருந்ததைக் காண்பது சுலபமாய் இருக்கின்றது. கலாத்தியாவிலும் (கலா. 1:2) மற்றும் ஆசியாவிலும் (வெளி. 1:4) "சபைகள்" இருந்தன. புதிய மற்றும் வித்தியாசமான ஆராதனை நடைமுறைகள் - "கர்த்தருடைய பந்தி" (1 கொரி. 11:17-34), வாராந்தரக் காணிக்கைகள் (1 கொரி. 16:1, 2) மற்றும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபித்தல் (1 தெச. 5:17, 18; 1 தீமோ. 2:5; எபே. 5:20) போன்றவை கடைப் பிடிக்கப்பட்டன. தேவனுடனான உடன்படிக்கைகளிலும் கூட மாற்றங்கள் இருந்தன என்று எபி. 8:6, 7 குறிப்பிடுகின்றது.

ஆகையால், நடபடிகள் என்பது தேவனுடைய வெளிப்படுத்துதலின் செயல்முறையினுடைய மையமாக உள்ளது. இது வேதாகமத்தின் "அச்சாக", தேவனுடைய இரட்சிப்பின் திட்டங்களின் மாபெரும் கால அட்டவணையின் மையமாக உள்ளது. பிதாவின் கிருபையினால், அவருடைய குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்ட இரட்சிப்பைச் செயல்படுத்தும் முக்கிய நிகழ்ச்சிகள் இதில் அடங்கியுள்ளன (அப். 20:28) .

ஏவப்பட்டுள்ள மற்ற அறுபத்தி ஐந்து புத்தகங்களைக் காட்டிலும் நடபடிகள் என்பது அதிக முக்கியத்துவம் பெற்றதல்ல, ஆனாலும் இது மற்ற எல்லாவற்றையும் புரிந்து கொள்ளத் திறவு கோலாய் இருக்கின்றது. நடபடிகளில் நடைபெற்றதென்ன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுதலானது மற்ற எல்லாப் புத்தகங்களையும் சரியாகப் புரிந்து கொள்வதை முடியாததாக்குகின்றது. வேதாகமத்தில் நடபடிகள் இல்லாதிருந்தால் எப்படியிருக்கும் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். அங்கு குழப்பத்திற்கு மட்டுமே வழி நடத்தக் கூடிய இணைப்பற்ற இடைவெளிதான் விடப்பட்டிருக்கும். அவ்வித

மான விளங்கிக்கொள்ளமுடியாத இடைவெளியானது காலங்களுக்கான தேவனுடைய வடிவமைப்பைப் புரிந்து கொள்வதில் எவ்வித வளர்ச்சியையும் தடை செய்துவிடும்.

## வெற்றிகள்

கர்த்தருடைய அழைப்பின் முதல் நாளன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் சபையின் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டார்கள் (அப். 2:41). விரைவிலேயே இந்த எண்ணிக்கை யானது பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கணக்கிடாம லேயே, ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்களாக வளர்ந்து பெருகியது (அப். 4:4). பின்வந்த நாட்களில் திரளான கூட்டத்தார் பதில்செயல் செய்யத்தொடர்ந்தார்கள் (அப். 5:14). சமாரியா போன்ற மற்ற இடங்களிலும் மாபெரும் புத்துயிர்ப்புக்களும் பதில்செயல்களும் காணப்படத் தொடங் கின (அப். 8:4-8). எத்தியோப்பிய மந்திரி என்ற "ஒரு மனிதரின் உயிர்ப்பிப்பினால்" ஆப்பிரிக்காக் கண்டம் கூட இந்தப் பெரும் ஆர்வத்தினால் தொடப்பட்டது (அப். 8:26-39).[1]

தர்சுப் பட்டணத்துச் சவுல், இயேசுவுக்கான இந்தத் தொடக்க கால வெற்றிகளை எதிர்த்து, மூர்க்கத்துடன் செயல் பட்டார்; ஆனால் விரைவிலேயே அவரும் அவ்வெற்றிகளில் ஒருவராக ஆனார் (அப். 9:1-22). வரலாற்றுப் பூர்வமான, முன்னுதாரணமெதுவுமற்ற மற்றும் இணையற்ற சுவிசேஷப் பயணங்கள், முதல் நூற்றாண்டில் அறியப்பட்டிருந்த முழு உலகின் மற்ற கண்டங்களுக்குச் சுவிசேஷத்தைப் பரப்ப உதவி செய்தன. உண்மையிலேயே நடபடிகளானது கிளர்ச்சியூட்டும் வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது.

## வெற்றிகளை விட அதிகமான தோல்விகள்

முதலில், யூதப் பண்டிகைகளுக்காக எருசலேமில் கூடி யிருந்த பத்து லட்சத்திற்கும்[2] அதிகமான பார்வையாளர்களில், ஏறக்குறைய மூவாயிரம் பேர் மட்டுமே மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்திற்கான பேதுருவின் அழைப்புக்குச்

செவி கொடுத்தார்கள். ''அவனுடைய [பேதுருவினுடைய] வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள்'' ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 2:41). வார்த்தையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்னவானார்கள்? தனிச்சிறப்பான அந்த நாளில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்ட திரளான கூட்டத்தாரைக் கணக்கிடுகையில், பதில்செயல் செய்தவர்களின் விகிதம் அவ்வளவு அதிகமாய் இருக்கவில்லை. கிறிஸ்து வரும்பொழுது அவரை ஏற்றுக் கொள்ளுவதற்கென்றே யூதர் குலத்திற்கு மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப் பட்டிருந்தாலும் (கலா. 3:24), இந்தப் பயிற்சியும் கலாச்சாரமும் யூதர்களை ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டுகளாகப் பண்படுத்தியிருந்தாலும், இந்த சத்தியங்களை 0.003 சதவிகித அளவான மக்களே அன்று ஏற்றுக் கொண்டார்கள் என்பதைக் காண ஏமாற்றமாகவே உள்ளது.

பதில்செயல் செய்யாத மக்களின் எண்ணிக்கைக்கு எதிர் நிலையில் பதில்செயல் செய்த மக்களின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும் பொழுது, எருசலேமில் அந்த முதல் நாளில் வெற்றிகளைக் காட்டிலும் தோல்விகளே அதிகம் கிடைத்தது என்று கூற முடியும். பதினைந்து நாடுகளில் இருந்து பார்வையாளர்கள் வந்திருந்தார்கள் (அப். 2:9-11), எருசலேம் நகரமானது உண்மையில் ''கூடார நகரமாகவே'' இருந்தது, ஒவ்வொரு வீடும், கட்டிடமும் பார்வையாளர்களால் நிறைந்து, தெருக்கள் மற்றும் கடை வீதிகளில் இருந்த திறந்த வெளி ஒவ்வொன்றிலும் கூடாரங்கள் நிறைந்திருக்கவேண்டும். சுற்றிலும் இருந்த மலைகள் மற்றும் சமவெளிப் பகுதிகளை ஒருவர் கண்ணோக்கியபோது, உலக முழுவதிலும் இருந்த வந்த குடும்பங்கள் தங்களின் கூடாரங்களில் தங்கி அவைகளை மூடியிருந்ததைக் கண்டிருப்பார்.

அந்த நாளில் மூவாயிரம் பேருக்குச் சற்று அதிகமானவர்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்டதென்பது உணர்வெழுச்சி மிக்கதாகவும் ஆச்சரியமானதாகவும் இருந்திருக்கும் என்பது உறுதியே, ஆனாலும், வசனத்தைக் கேட்டும் அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்னவானார்கள்? அவர்களைப்பற்றி லூக்கா ஒன்றும் குறிப்பிடவில்லை, ஆனால் வேதாகம மாணவர்கள் வரிகளுக்கிடையில் வாசித்து திரளான கூட்டத்தார் பதில்செயல் செய்யவில்லை என்பதை

உணர வேண்டும்.

பின்னாளில் லூக்கா, ''வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்'' (அப். 4:4) என்று எழுதினார், ஆனால் அந்த "அநேகரில்" இராதவர்களுக்கு என்னவாயிற்று? லூக்கா "பெரும்பாலோர்" என்று கூறவில்லை; அவர் "அநேகர்" என்று மட்டுமே கூறினார். ''பலர்'' கேட்டும் விசுவாசியா திருந்தார்கள்.

மற்றும், ஸ்தேவானைக் கல்லெறிந்தது யார்? சுவிசேஷத்தின் சத்தியத்தைக் கேட்டவர்களில் அந்த யூதர்களும் இருந்திருக்க வில்லையா? முன்பு அவர்கள் கேட்டிராவிட்டாலும், அந்த நாளில் ஸ்தேவானிடமிருந்து அதை அவர்கள் கேட்டிருப்பார் கள் என்பது நிச்சயம் (அப். 7:1-54). சீஷர்கள் யாவரும் தங்களது வீடுகள், வேலைகள் மற்றும் குடும்பங்கள் ஆகியவற்றிலிருந்து சிதறடிக்கப்படுமளவுக்கு எருசலேமில் இருந்த சபைக்கு எதிராகப் பயங்கரமான உபத்திரவங்கள் எழும்பின (அப். 8:1-4). பலஸ்தீனத்தில் இருந்த யூதர்களில் பெரும் பாலோர் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவு.

பின்னாளில், தர்சுப் பட்டணத்துச் சவுல் தமஸ்குவில் ஞானஸ்நானப்படுத்தப்பட்ட பொழுது அவரைக் கொல்லத் தேடியவர்கள் யார்? கருத்து வேறுபட்ட யூதர்கள் அவரைக் கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டியதை அவர் அறிந்து, ஒரு கூடையில் மதில் வழியாய் இறக்கி விடப்பட்டு நகரில் இருந்து தப்பித்துச் சென்றார் (அப். 9:23-25). பவுல் எருசலேமுக்குத் திரும்பி வந்தாலும், கிரேக்கம் பேசும் யூதர்களுடன் அவரது விவாதங்களானவை அவரைக் கொலை செய்யும்படியான மற்ற முயற்சிகளை விளைவித்தது, எனவே சீஷர்கள் அவரைத் தர்சு நகரத்திற்கு அனுப்பி வைத்தார்கள் (அப். 9:29, 30).

''கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 18:8) என்று கூறிய இடத்திலும் கூட லூக்கா விசுவாசியாதிருந்தவர்களைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. ஓய்வு நாட்களில் பவுல் யூதர் களுடன் செய்த சம்பாஷணையானது, பவுல் ஜெப ஆலயத் திற்குச் செல்லுவதை விட்டொழித்து, அருகில் இருந்த யுஸ்து என்பவரின் வீட்டில் போதிக்குமளவுக்குத் தேவதூஷணத் தையும் எதிர்ப்பையும் கொண்டு வந்தது என்று அவர் பதிவு

*செய்தார் (அப். 18:4-7). ஏறக்குறைய கொரிந்துவில் அப்பொழு திருந்த குடிமக்கள் யாவரும் (அந்த வேளையில் கொரிந்துவில் ஏறக்குறைய 2 1/2 லட்சம் மக்கள் தொகை இருந்ததாகக் கூறப் பட்டது) இந்த "அநேகரில்" இல்லை என்பதைக் காண்பவர் வியப்படைந்தாக வேண்டும்.*

## தோல்வியொன்று விபரமாய்க் கூறப்பட்டது

*பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்ட காலத்தில் பேலிக்ஸ் என்பவர் பலஸ்தீனத்தின் தேசாதிபதியாக இருந்தார் (அப். 23:24). நான்கு மனிதர்கள் தங்களின் பிரார்த்தனையை நிறைவேற்ற உதவி செய்வதற்காகப் பவுல் ஆலயம் சென்ற பொழுது துரோப்பீமு என்ற புறஜாதியாரைத் தம்முடன் கூட்டிச் சென்றார் என்ற பொய்யான குற்றச்சாட்டைக் கொண்டு பவுல் கைது செய்யப்பட்டிருந்தார் (அப். 21:17-24, 27-29). பவுல் இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி ஒன்றுமறியா திருந்தும், கைது செய்யப்பட்டார். சனதெரீன் சங்கத்தாருக்கு முன்பாக அவர் தற்காப்பு வாதம் செய்ய அவருக்கு நேரம் தரப்பட்டது (அப். 22:30; 23:1-10) ஆனால் தொடர்ந்து எழுந்த கலகமும், நாற்பதுக்கும் அதிகமான மனிதர்கள் பவுலைக் கொலை செய்யத் தீட்டிய சதி திட்டமும் சேர்ந்து எருசலேமில் இருந்த ரோமச் சேனாதிபதியான கிலவுதியு லீசியா பவுலைச் செசரியாவுக்கு அனுப்பி வைக்கக் காரணமாயிற்று (அப். 23:9-13, 31-33).*

*சில நாட்களுக்குப் பின்பு பேலிக்ஸூம் அவருடைய யூத மனைவியாகிய துருசில்லாளும் (அப். 24:24) பவுல் சொன்ன தைத் தனிச் சிறப்புள்ள முறையில் கேட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தைப் பவுல், "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்" பற்றிப் பிரசங்கிப்பதற்குப் பயன்படுத்தினார் (அப். 24:24, 25). இவ்வகையான பிரசங்கத் தைக் கேட்ட பேலிக்ஸ் பயமடைந்தார் என்று லூக்கா கூறினார். பவுல் தமக்குப் பணம் கொடுப்பார் என்ற நம்பிக்கை யில் அவர் எந்த முடிவையும் "சமயமான போது" பார்க்கலாம் என்று தாமதப்படுத்தினார் (அப். 24:25, 26). அப்படி ஏதேனும்*

*“சமயம்” வாய்த்ததா என்பது பற்றி லூக்கா பதிவு செய்ய வில்லை! இரண்டு ஆண்டுகளில் பொர்கியு பெஸ்து என்பவர் பேலிக்ஸுக்கு அடுத்தபடியாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, பேலிக்ஸ் ஏவப்பட்ட வரலாற்றுப் பதிவேட்டில் இருந்து மறைந்து போனார்.*

*பேலிக்ஸ் கவலை தரும் ஒரு முரண்பாட்டு மெய்யுரையை விளக்கப்படுத்துகின்றார். பவுலினால் முன் வைக்கப்பட்ட ஆவிக்குரிய அறைகூவல்களின்மேல் ஆர்வம் எதையும் அவர் காட்டியிருப்பாரா என்று வியப்படையுமளவுக்கு அவரது பின்னணியும் பயிற்சியும் தேவபக்தியற்றவைகளாய் இருந்தன. அவர் ஒரு அடிமையாகப் பிறந்து, அரண்மனைகளில் அரச உறுப்பினராக வளர்ந்து, விரைவிலேயே தமக்கு ஆதரவு காட்டுபவர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்கான தந்திரத்தைக் கற்றுக் கொண்டார். ஆதரவை ஆதாயப்படுத்திக்கொள்வதற் காக அவர் யூதர்களின் பிரதான ஆசாரியராய் இருந்த யோனத்தானைக் கொலை செய்தல் மற்றும் நானூறு யூத ஆசாரியர்களைக் கொல்லுவித்தலில் ஈடுபடுதல் போன்றவை களைக் கூடச் செய்யுமளவுக்கு கொடியதும் காட்டுமிராண்டித் தனமானதுமான பல செயல்களைச் செய்ய அவர் சித்தமா யிருந்தார். புகழ்பெற்ற யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் இவரை பெரும்புகழ்ச்சியுள்ள மனிதராக விவரிக்காதிருந்தார். இன்னொரு தொடக்க கால வரலாற்றாளரான டேசிட்டஸ் என்பவர், பேலிக்ஸ் “அடிமையின் ஆத்துமாவும் அரசாட்சியின் வல்லமையும்” உடையவர் என்று மதிப்பிட்டார். கடைசியில் பேலிக்ஸ், தேசாதிபதி என்ற அதிகாரத்திற்கு உயர்ந்தார், அவர் யூதர்களுக்கெதிரான தமது பழி வாங்குதல்களுக்குப் புகழ் மிக்கவராய் இருந்தார்.*

*எமெசாவின் அரசரான ஆசிஸின் மனைவியும் ஏரோதியக் குடும்பத்தின் பெண்மணியுமான துருசில்லாளை பேலிக்ஸ் தம் மனைவியாக்கும்படித் திருடிக் கொண்ட உண்மையிலும் கூட அவரது பேராசையும் சூழ்ச்சியும் காணப்படுகின்றன. அவளது கொள்ளுத்தாத்தாவாயிருந்த பெரிய ஏரோது, இயேசு பிறந்த வேளையில் பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்த குழந்தைகளைக் கொல்லும்படி கட்டளையிட்டி ருந்தார் (மத். 2:16-18). அவளது பெரிய சிற்றப்பாவாயிருந்த ஏரோது அந்திப்பா, யோவான் ஸ்நானனைக் கொலை செய்யக்*

*கட்டளையிட்டிருந்தார் (மத். 14:1-12). அவளது தகப்பனா யிருந்த ஏரோது அகிரிப்பா, யோவானின் சகோதரரான யாக்கோபுவைப் பட்டயத்தால் கொலை செய்திருந்ததோடு, பேதுருவையும் கொலை செய்ய விருப்பமாய் இருந்தார் (அப். 12:1, 2). இதை விட அதிகமான சுயநலமும், பேராசையும், கொடுமையும் மற்றும் சூழ்ச்சியும் கொண்ட ஒரு தம்பதியை ஒருவர் கற்பனை செய்வதே கடினமாகும். தேவபக்தியற்ற தம்பதியொன்றுக்கு சுவிசேஷம் எப்பொழுதாவது தேவையா யிருந்தது என்றால், அந்தத் தம்பதியர் பேலிக்ஸ் மற்றும் துருசில்லாள் ஆகியோரே ஆவார்கள்.*

*இந்த மனிதருக்கு முன்பாகப் பவுலை விசாரிக்க வேண்டும் என்று யூதர்கள் விரும்பியிருந்ததால், அவர்கள் பவுலை எவ்வளவு அதிகமாய் வெறுத்திருப்பார்கள்! அவர்கள் பேலிக்ஸை வெறுத்தார்கள், ஆனால் அதை விட அதிகமாய்ப் பவுலை வெறுத்தார்கள் என்பது தெளிவு.*

***அவர் கேட்ட பிரசங்கம்***

*பவுல், "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்" பிரசங்கித்தார் (அப். 24:25). புகழ் பெற்ற இந்த வேசித்தனமுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்க அவர் தயங்கவில்லை. தேவனுடைய எச்சரிப்புக்கள் தேவைப் பட்டிருந்த விபசாரக்காரர்களை அவர் தவிர்க்கவில்லை. அவர்களின் தெளிவான பாவங்கள் பற்றிய அறிவுறுத்தல்களை அவர் விட்டுவிடவில்லை. அவர்களின் வாழ்வில் இருந்த அழிவின் சூழ்நிலையை அறியாதவர் போல அவர் பாசாங்கு செய்யவில்லை.*

*வேறு எவரை விடவும் அநீதி நிறைந்திருந்த அந்தத் தம்பதிக்கு அவர் சரியான வகையான வாழ்வு என்ற "நீதியை"ப் பற்றி உரைத்தார். தங்கள் சுயநல விருப்பமான வழியில் குறுக்கிடும் எவர் மீதும் சீறியெழக்கூடிய இருவருக்கும் அவர் "இச்சையடக்கம்" பற்றியுரைத்தார். அவர்கள் தேவனிடத் திற்குத் திரும்பாதிருந்தால் காத்திருக்கக் கூடிய பரிதாபமான விளைவுகளை ஒதுக்கி விடாமல் அவர் "இனி வரும் நியாயத் தீர்ப்பு" பற்றி அவர்களுக்குக் கூறினார்.*

*சுவிசேஷப் பிரசங்கியார் என்ற வகையில் பவுலின் தைரியம் இவ்விடத்தில் பிரகாசிக்கின்றது; அவர் பேலிக்ஸ் மற்றும்*

துருசில்லாள் ஆகியோரிடத்தில் மக்களின் வாழ்வுக்கான தேவனுடைய சித்தத்தை மட்டுமின்றி, அவர்கள் மனந்திரும்பா திருந்தால் பின்வரும் வாழ்வில் அவர்களுக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றியும் கூறினார். அவர்களின் பாவத்தைப் பற்றி அவர் சுற்றி வளைத்துப் பேசவில்லை; அவர்களின் பாவங்கள் மற்றும் வரப்போகும் விளைவுகள் பற்றி அவர் நேரடியாகவே அவர்களிடம் பேசினார். பவுல் பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட மற்ற பல நல்ல பரிசுத்தமான தலைப்புகளைப் பற்றிப் பிரசங்கித்திருக்கலாம், ஆனால் அவர் ‘‘பிரச்சனைக்குப் பிரசங்கித்தார்.’’ பேலிக்ஸ் நூற்றுக்கணக்கான யூதர்களைக் கொலை செய்திருந்தார் என்ற அவரது பின்னணியை அறிந்திருந்த பவுல், பேலிக்ஸின் விரல் நொடிப்பில் தம் சொந்த உயிரும் போக்கப்படும் என்பதையும் அறிந்திருந்தார். இந்த விஷயத்தை அவர் அலைபாய்வதாகவோ அல்லது பாசாங்கு செய்வதாகவோ எடுத்துக்கொள்ளவில்லை. அவர் பாவி களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்! ஓ! இன்றைய நாட் களில் பிரசங்க மேடைகளில் பிரசங்கியார்கள் பாவிகளுக்கு அவர்களின் பாவங்களைப் பற்றிய தேவனுடைய சத்தியத்தைப் பிரசங்கிக்க வேண்டுமே! வேறு எப்படி பாவங்கள் மன்னிக்கப் பட முடியும்?

**அவர் கொடுத்த பதில்**

பேலிக்ஸ் பயமடைந்தார், ஒருவேளை அவர் தமக்குப் பின்னிருந்த நித்திய அழிவின் படிக்கட்டுகள் பற்றி அவை தம் தேவபக்தியற்ற வாழ்வைப் பற்றிப் பிடிக்க வேகமாய் வருவது பற்றிக் கேள்விப்பட்டார். பாவம் பற்றிய நேரடியான இந்தப் பேச்சை அவரால் இனியும் தாங்க முடியாதிருந்தது, எனவே அவர் சமயம் வாய்க்கும் போது மறுபடியும் பவுலை அழைப்பிப்பதாக நொண்டிச் சாக்குக்கூறி அவரை அனுப்பி விட்டார். பணத்துக்காக அவர் பவுலுடன் “பேரம் பேசுவதற்கு” நம்பிக்கையாயிருந்ததாக லூக்கா பதிவு செய்தார். பேலிக்ஸ் அப்பொழுதும் கூட இலஞ்சம் வாங்க ஆசையாய் இருந்தார்!

துருசில்லாள் முற்றிலும் மாறுபட்டவளாய் இருந்தாள்! அவளிடத்தில் பவுலின் பிரசங்கம் ஏற்படுத்திய செயல் விளைவு பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை. யூதக் கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்டு, மோசேயின் பிரமாணத்திற்கு நன்றாய்ப்

*பழக்கப்பட்டிருந்த அவள் தன் விருப்பத் தேர்வைப் பல ஆண்டு களுக்கு முன்னதாகவே மேற்கொண்டிருந்திருப்பாள். அவள் மார்க்க வெறியன் என்று தாம் எண்ணிய நபரிடமிருந்து வந்த ஆவிக்குரிய எச்சரிக்கைகள் எதையும் செவி சாய்த்துக் கேளாமல், தன் சுயநலமான வழியிலே செல்லவே விரும்பி னாள். அவளுடைய இருதயத்தில் நேராக விழுந்த சுவிசேஷ மானது "வழியருகான நிலத்தில்" (லூக். 8:5, 12) விதைத்த விதையாய்க் காணப்பட்டது.*

*பேலிக்ஸ், "சமயம் வாய்ப்பதற்கு" விருப்பத்தை வெளிப் படுத்தினார். கிறிஸ்துவுக்கு மனம் மாற வசதியான சூழ்நிலை என்று ஒன்றுள்ளதா? இயேசுவினிடத்தில் வருகிறவர்கள் தன்னையே வெறுக்க வேண்டும் என்பதே அவரது முதல் அறிவுறுத்தல்களில் ஒன்றாகும் (மத். 16:24). ஒருவர் தம் சொந்த விருப்பங்களை வெறுப்பதற்குச் சமயம் வாய்ப்பதென்பது அரிதானதாகும். பேலிக்ஸ்ஸின் தாமதம் மற்றும் மறுப்புக்கு அவர் தம் பாவத்தையும் சுயத்தையும் புறம்பே அகற்றுவதில் அவருக்கிருந்த விருப்பமில்லாமைதான் உண்மையான காரணமாயிருந்திருக்க வேண்டும். அவரது இருதயமானது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் உண்மையாய்த் தொடப்பட்டிருந்தால், காமம், பேராசை அகம்பாவம், குறிக்கோள் மற்றும் சுயநலம் ஆகிய கொந்தளிப்புகள் சத்தியம் என்ற பிரகாசிக்கும் நெருப்புப்பொறிகளால் மென்மை யாக்கப்பட அது அனுமதித்திருக்கும்.*

*ஆசிஸ் அரசரிடம் துருசில்லாளைத் திருப்பிக்கொடுத்து, அவரது மனைவியைத் திருடி அவளுடன் விபசார வாழ்க்கை வாழ்ந்ததற்கு மன்னிப்புக் கேட்க பேலிக்ஸுக்கு எப்பொழுது வசதியாய் இருந்திருக்கும்? அப்படியான சமயம் பேலிக்ஸுக்கு எப்பொழுதாவது கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. மாறாக, அது மிக உயர்ந்த வகையான தாழ்மைப்படுதலாய் இருந்திருக்கும். யூதர்களின் ஆசாரியர்களைக் கொலை செய்த தற்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்க எப்பொழுதாவது சமயம் வாய்த்திருக்குமா? இவ்விரண்டு செயல்களுக்குமே எப்பொழுதும் சமயம் வாய்த்திருக்காது.*

*எவரொருவருக்குமே கிறிஸ்துவுக்குள் மனமாற்றமடைவது சமயம் வாய்ப்பதினால் வருகின்றதல்ல! கிறிஸ்துவுக்குள் மனம்மாறுதல் என்பது விலையேறப்பெற்றதாகும். இது ஒரு*

*நபரைப் பற்றிய எல்லாவற்றையும் விலையாகக் கோருகின்றது: இது ஒரு நபரிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விலையாகக் கோருகின்றது. சுயத்தை மறுத்தல் என்பதே இதன் உயரிய முன்னுரிமையாகும். கிறிஸ்துவுக்கு மனம் மாறுதல் என்றால், ஒருவர் தம் சொந்தக் கருத்துக்கள் மற்றும் விருப்பங்களின்படி வாழ்வதை நிறுத்துதல் என்றாகின்றது. கிறிஸ்துவுக்கு மனம் மாறுதல் என்பது, ஒப்புக் கொடுத்தல், பரிசுத்தப்படுத்துதல், ஒப்புக் கொடுத்தல் மற்றும் தைரியம் என்று அர்த்தப் படுகின்றது. சமயம் வாய்ப்பது என்பது எவரொருவரையும் எப்பொழுதும் கிறிஸ்துவுக்குள் வழி நடத்துவதில்லை!*

# *முடிவுரை*

*நடபடிகள் என்பது கிறிஸ்துவுக்குள் மெல்சிலிர்க்கும் மனமாற்றங்களின் புத்தகமாய் இருக்கின்றது, இருப்பினும் அது பல தோல்விகளைக் குறிப்பிட்டு, சுவிசேஷத்தை மறுத்த பாவமுள்ள மக்களின் நிகழ்ச்சிகளையும் பதிவு செய்துள்ளது. தலைசிறந்த மறுப்புகளில் ஒன்று பேலிக்ஸினுடையதாகும். உடன்பாட்டில் விட்டுக் கொடுத்தலை தேடும் கவலை மிக்க வராக நித்திய வரலாற்றில் அவர் கீழே சென்றார் - தேவன் ஒருபொழுதும் உடன்பாட்டில் விட்டுக் கொடுத்தலை உடன்பாட்டை வழங்குவதில்லை.*

*பாவத்தின் சம்பளம் மரணம் என்பது இன்றும் உள்ளதாகும் (ரோமர் 6:23). இதற்கு மறுபுறத்தில், தேவனுடைய இலவச மான ஈவாக கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவன் என்பதும் இன்றும் உள்ளது, தேர்ந்தெடுக்கும் வாய்ப்பானது என்றென்றும் தனிநபர் ஒவ்வொருவருக்கும் விடப்பட்டுள்ளது. தேவன் தொடர்ந்து இரட்சிப்பை வழங்குகின்றார். கேட்பவர்கள் ஒவ்வொருவரின் இருதயக் கதவருகிலும் கிறிஸ்து தொடர்ந்து நின்று தட்டுகின்றார், உட்பிரவேசிக்கத் தேடுகின்றார் (வெளி. 3:20-22). பாவத்தின் பயங்கரமான சுமைகள் மற்றும் விளைவுகளுடன் ஒப்பிடும்போது, கிறிஸ்துவின் நுகமானது மெதுவாகவும், அவரது சுமையானது இலகுவாகவும் இருக்கின்றது (மத். 11:28-30).*

குறிப்புகள்

*[1]இரண்டு மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளின் போது, கர்த்தருடைய சபையானது எத்தியோப்பியா மற்றும் அதனருகாமையில் இருந்த ஆப்பிரிக்க நாடுகள் மற்றவற்றிலும் பல இடங்களில் செழித்து வளர்ந்ததாக வரலாறு சுட்டிக் காட்டுகின்றது. ஒருவேளை இவையாவும் "ஒரு நாளில் ஒரு மனிதரின் உயிர்ப் பித்தலினால்" ஏற்பட்ட விளைவாயிருக்குமோ என்று ஒருவர் வியப்படைகின்றார்!*

*[2]சில வரலாற்றாளர்கள் இந்தக் கூட்டமானது பதினைந்து முதல் இருபது இலட்சம் வரை மக்கள் கொண்டதாயிருக்கலாம் என்று கணக்கிடுகின்றார்கள்!*